ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2153 - 2019 දෙසැම්බර් මස 06 වැනි සිකුරාදා - 2019.12.06

*2153 ஆம் இலக்கம் - 2019 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 06 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (IIஅ) - விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)



| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | 3176 | பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 3183 |



**கவனிக்க.-** ஒதுக்கீடு (திருத்தம்) சட்டமூலம் 2019, நவெம்பர் மாதம் 29 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகின்றது.

**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

## முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர், அதாவது 2019, திசெம்பர் மாதம் 27 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2019, திசெம்பர் மாதம் 13 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரனியல் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2019 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

*3173-B 81584-5,403 (2019/12)*

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரச சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

**1. வேண்டப்படும் பொதுத் தகைமைகள் :**

*1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இலங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.*

*1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக்குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து சிங்கள மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து தமிழ் மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிறபதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களுக்கும் ஏற்புடைத்தாகாது).*

*1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரச கரும மொழித் தேர்ச்சி சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகூர் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான "புதிய சேர்வாளர்கள்" ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.*

**2. சேவை நிபந்தனைகள் : பொது**

*2.1 நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை, திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக்காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரச சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.*

*2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம்.*

*அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர் தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.*

*2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலூவது சேவையாற்றும்படி கேட்கப்படலாம்.*

***3. நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள் :***

*3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்கவேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :-*

*3.1.1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகூர் நிலையிலேயே இருக்கும். தகுதிகூர் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்திவைக்கலாம்.*

*3.1.2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.*

*3.1.3 சிங்கள மொழி மூலத்தில் அல்லது தமிழ் மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.*

*3.1.4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகூர் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுறத் தவறினால் வேதன ஏற்றம் இடைநிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் எய்தும் வரையில் அல்லது 3.1.6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.*

*3.1.5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர் அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.*

*3.1.6 இந்த விதித்துரைத்த 2 1/2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத் தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.*

*3.1.7 அரச சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரச சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகூர் நிலையில் இருக்க வேண்டியதில்லை.*

*3.1.8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரச சேவையில் ஏற்கனவே நிரந்தர/தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்ந்த)தீவின் எந்தப் பகுதியிலூவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.*

***4. பணிக்கமர்த்தும் நியதிகள் :***

*4.1 நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகையாக வழங்குதல் வேண்டும்.*

*4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவுதொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்த நிதியத்துக்குத் தனது உதவுதொகையாக அரசாங்கம் செலுத்தும்.*

*4.3 அரச சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்ளூராட்சிக் சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரச சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.*

*4.4 ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையவையான, அரச சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரச சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோகத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்தபோதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஓய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.*

**5. யுத்த சேவைச் சலுகை :**

*5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவையாற்றியவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழுநேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.*

**6. அரசசேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள் :**

*6.1 எல்லூத் தகைமைகளையும் உடைய அரச சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரச சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்தமட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.*

*6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலாம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்பட மாட்டாது.*

*6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவுசெய்வதற்கு எந்தவொரு விதத்திலூவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.*

*6.4 விண்ணபத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.*

*6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமைபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.*

**7. தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை :**

*7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம். படி முதலியன சேர்ந்திருக்கா.*

**8. ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை :**

*இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந் திகதிய இல. 15/90, 1990.03.25 ஆந் திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந் திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.*

# பரீட்சார்த்திகளுக்கான விதிகளும் அறிவுறுத்தல்களும்

1976 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க திருத்தச் சட்டத்துக்கமைவான, 1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் காலத்துக்குக்காலம் வெளியிடப்படுகின்ற சட்டங்களுக்கும் ஒழுங்குமுறைகளுக்கும் ஏற்ப ஒழுகுவதற்கு சகல பரீட்சார்த்திகளும் கட்டுப்பட்டவர்களாவர்.

1976 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்கத் திருத்தச் சட்டத்துக்கமைவான, 1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் 20 ஆம் வாசகத்தின் மூலம் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்துக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய கீழ்க் குறிப்பிடப்படும் நிபந்தனைகள் மற்றும் கட்டுப்பாடுகள் விதிக்கப்படுகின்றன.

அனைத்துப் பரீட்சார்த்திகளும், கீழ்க் குறிப்பிடப்படும் விதிகளுக்கு கட்டுப்பட வேண்டும் என்பதுடன் இவ் விதிகளில் எவற்றையேனும் மீறும் பரீட்சார்த்தி ஒருவர் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் தீர்மானத்துக்கு அமைய கீழ்க் குறிப்பிடப்படும் தண்டனைகளில் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட தண்டனைகளுக்கு உட்படுத்தப்படுவார்.

I. விசாரணைக்கு உட்படுத்தப்படுகின்ற முழுப் பரீட்சைக்கும் அல்லது அதன் ஒரு பகுதிக்கு தோற்றுவதற்குத் தடை விதித்தல்;
II. விசாரணைக்கு உட்படுத்தப்படும் பரீட்சையின் ஒரு பாடத்திற்கு அல்லது மொத்தப் பரீட்சைக்கும் தகுதியற்றவர் ஆக்குதல்;
III. இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் நடாத்தப்படுகின்ற அனைத்துப் பரீட்சைகளுக்கும் தோற்றுவதற்கு வாழ்நாள் தடை விதித்தல்;
IV. குறிப்பிட்ட காலப் பகுதிக்கு இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் நடாத்தப்படுகின்ற பரீட்சைகளில் தோற்றுவதற்குத் தடை விதித்தல்;
V. இடைநிறுத்தப்பட்ட, பரீட்சைக்கான தடை உடன் கடிதம் ஒன்றை வழங்குதல்;
VI. குறிப்பிட்ட காலப் பகுதிக்கு சான்றிதழ் தடை செய்யப்படல்;
VII. பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் கீழ் குற்றவியல் வழக்கு ஒன்றைத் தாக்கல் செய்வதற்காக பரீட்சார்த்தியை காவற்றுறையிடம் ஒப்படைத்தல் அல்லது அக்குறித்த செயற்பாடு தொடர்பாக காவற்றுறையில் புகார் செய்தல்;
VIII. பரீட்சார்த்தி அரசாங்க ஊழியராக அமையும் சந்தர்ப்பத்தில் குறித்த பரீட்சார்த்தியின் செயற்பாடு தொடர்பாக (ஒழுக்காற்று நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக) குறித்த பரீட்சார்த்தியின் நியமன அதிகாரிக்கு அறிவித்தல்.

பரீட்சைக்கு முன்பு, பரீட்சை நடைபெற்றுக் கொண்டிருக்கும் போது அல்லது பரீட்சைக்கு பின்பு அல்லது வேறு எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் அவ்வாறான பரீட்சார்த்தி தொடர்பாக நடவடிக்கை எடுக்கும் அதிகாரத்தை பரீட்சைகள் ஆணையாளர் நாயகம், தம்வசம் கொண்டவர் ஆவார். இது தொடர்பாக அவரால் மேற்கொள்ளப்படும் தீர்மானம் இறுதியானதாகும்.

1. சகல பரீட்சார்த்திகளும் பரீட்சை மண்டபத்தினுள் மற்றும் பரீட்சை நடைபெறும் வளாகத்தினுள் பரீட்சை மேற்பார்வையாளருக்கு அவரது பணிக் குழாமுக்கு, அதே போன்று ஏனைய பரீட்சார்த்திகளுக்கு இடையூறு அல்லது தடங்கல்கள் ஏற்படாத வகையில் நடந்துகொள்ள வேண்டும். பரீட்சார்த்திகள் பரீட்சை வளாகத்தின் சொத்துகளுக்கு அல்லது பரீட்சை ஊழியர்களின் தனிப்பட்ட சொத்துகளுக்கு சேதம் ஏற்படுத்துதல் கூடாது.
2. பரீட்சார்த்திகள் பரீட்சை நடைபெற்றுக் கொண்டிருக்கும் காலப் பகுதியிலும் பரீட்சை ஆரம்பிப்பதற்கு முன்பும் அதே போன்று பரீட்சை நடைபெற்று முடிவடைந்தவுடனும் பரீட்சை மேற்பார்வையாளர் மற்றும் அவரது பணிக் குழுவின் அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப நடந்து கொள்ளல் வேண்டும்.
3. பரீட்சையின் போது வினாப்பத்திரத்திற்கு விடையளிப்பது ஆரம்பிக்கப்பட்டு அரை மணித்தியாலம் கழிந்த பின்னர் எந்தவொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்திற்குள் அனுமதிக்கப்பட மாட்டார்கள். மேலும் பரீட்சை முடிவடையும் வரை எந்தவொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்வதற்கும் இடமளிக்கப்பட மாட்டாது. செயன்முறைப் பரீட்சைகள் அல்லது வாய்மொழி மூலமான பரீட்சைகளுக்கு உரிய நேரத்திற்கு சமுகம் அளிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
4. சகல பரீட்சார்த்திகளும் தமது சுட்டெண்ணுக்குரிய ஆசனம் தவிர்ந்த வேறு எந்த இடத்திலும் அமர்தல் கூடாது. பரீட்சை மேற்பார்வையாளரின் விசேட அனுமதி இன்றி தன்னுடைய இடத்தை மாற்றக் கூடாது. தனக்கு ஒதுக்கப்பட்ட ஆசனத்தைத் தவிர வேறு இடத்தில் அமர்தல் மோசடி நோக்கத்துடன் செய்யப்பட்ட செயலாகக் கருதப்பட நேரிடும்.
5. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி பேணப்பட வேண்டும். எக் காரணம் கொண்டும் பரீட்சை மண்டபத்தினுள் பரீட்சை மேற்பார்வை பணிக்குழுவில் உள்ள ஒருவரைத் தவிர பரீட்சை மண்டபத்தினுள் அல்லது வெளியே இருக்கும் எவர் ஒருவருடனும் எந்தவித காரணத்திற்காகவும் கதைத்தல் அல்லது தகவல் பரிமாறல் அல்லது வேறு எந்தவிதமான கொடுக்கல் வாங்கலிலும் ஈடுபடுதல் முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது.
6. பரீட்சை சுட்டெண்ணை மட்டும் கொண்டே பரீட்சார்த்தியின் விடைத்தாள்கள் இனங்காணப்படுகின்றமையால் விடைத்தாளில் தன்னுடைய பெயரை எழுதுதல், விடைத்தாளை இனங்கண்டு கொள்ளக்கூடிய வகையில் ஏதேனும் குறியீடு அல்லது குறிப்பு இடுதல், விடைத்தாளில் அநாகரிகமான அல்லது அவசியமற்ற விடயங்களை எழுதுதல், விடைத்தாளுடன் நாணயத்தாள்களை இணைத்தல் ஆகியவை முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளன. மேலும் வேறு எவரேனும் பரீட்சார்த்தியின் சுட்டெண்ணை தன்னுடைய விடைத்தாளில் எழுதுதலும் மோசடி நடவடிக்கை ஒன்றைச் செய்வதற்கு முயன்றதாகக் கருதப்படும். இனங்கண்டு கொள்ள முடியாத வகையில் சுட்டெண் எழுதப்பட்ட விடைத்தாள்களும் நிராகரிக்கப்படும்;
7. உமக்கு பரீட்சை மண்டபத்தினுள் வழங்கப்படும் தாள்கள் (பரீட்சை நடைபெறும் திகதிக்குரிய நோக்குனரின் குறுகிய கையொப்பம் மற்றும் திகதி இடப்பட்ட விடை எழுதும் தாள்கள்) தவிர வினாத்தாளிலோ அல்லது மேசையிலோ அல்லது வேறு ஏதேனும் இடத்திலோ எவற்றையும் எழுதுதல் கூடாது. இந்த அறிவுறுத்தல்களுக்கு மாறாக செயற்படுதல் மோசடி நோக்கத்துடன் செய்யப்பட்ட செயலாகக் கருதப்படும்.
8. பரீட்சார்த்திக்கு வழங்கப்படுகின்ற தாள்களை அல்லது விடை எழுதும் புத்தகத்தை கிழித்தல் அல்லது கசக்குதல் கூடாது. பரும்படி வேலைகளை செய்து பார்ப்பதற்காக உபயோகிக்கும் சகல தாள்களையும் தெளிவாக குறுக்காக கோடிட்டு விடைத்தாளுடன் இணைத்தல் அல்லது விடைத்தாளுடன் கையளித்தல் அல்லது வழங்கப்படுகின்ற அறிவுறுத்தலின் படி செய்தல் வேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதப்பட்ட எதனையும் வெளியே கொண்டு செல்லுதல் தடை செய்யப்பட்டுள்ளது. ஒரே வினாவிற்கான விடை இரு இடங்களில் எழுதப்பட்டிருப்பின் அவசியமற்ற விடையைத் தெளிவாக வெட்டி விட வேண்டும்.
9. பரீட்சையின் போது விடையளிப்பதற்காக உமக்கு வழங்கப்படுகின்ற தாள்கள் மற்றும் வேறு பொருட்களை பரீட்சை மண்டபத்திற்கு வெளியே கொண்டு செல்லுதல் தடை செய்யப்பட்டுள்ளது. இவ்வாறான அனைத்துப் பொருட்களும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்திற்கு சொந்தமானதுடன் இவ் விதியினை மீறுதல் ஒரு தண்டனைக்குரிய செயற்பாடாகக் கருதப்படும்.
10. பரீட்சையின் போது விடையளிப்பதற்காக தனக்கு வழங்கப்படுகின்ற காகிதாதிகள் ஒவ்வொரு பரீட்சையின் போதும் தனக்ருகே வைத்துக் கொள்ளக்கூடிய எழுத்து மூலமான அனுமதியுள்ள பொருட்கள் தவிர்ந்த ஏனைய குறிப்புப் புத்தகங்கள், குறிப்புகள் உள்ளடங்கிய தாள்கள் அல்லது கடதாசித்துண்டுகள் போன்றவை பரீட்சை மண்டபத்தினுள் பரீட்சைக்குத் தோற்றும் சந்தர்ப்பத்தில் தன் வசம் அல்லது அருகே வைத்திருத்தல் கூடாது. அது போன்றே பரீட்சை மண்டபத்தினுள் கையடக்கத் தொலைபேசி, இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள்/கருவிகள் (Electronic Communication Instruments/ Devices) தன் வசம் அல்லது அருகே வைத்திருத்தல் மற்றும் அந்த சாதனங்கள்/கருவிகளை உபயோகித்து வெளி நபர்களின் உதவிகளைப் பெற்றுக் கொள்ளல் மற்றும் பரீட்சை நடைபெறும் போது வேறு நபர்களுக்கு மற்றும் சமூக ஊடகங்களுக்கு தகவல் அனுப்புதல் மோசடிச் செயற்பாடு என்பதுடன் தண்டனைக்குரிய குற்றமாகும்.
11. இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள்/கருவிகள் மேற்குறிப்பிட்ட 10ஆவது பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள செயற்பாடுகள் தொடர்பாக உபயோகிக்கப்பட்டது கண்டுபிடிக்கப்பட்டால் அச் சாதனங்கள்/கருவிகள் உரிய விசாரணை நடவடிக்கைகள் முடிவடையும் வரை பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் வசம் எடுக்கப்படுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.
12. பரீட்சை மண்டபத்தில் அமர்ந்த பின்னர், பரீட்சைக்கு முன் அல்லது பரீட்சை நடைபெறும் சந்தர்ப்பத்தில் எந்தவொரு பரீட்சார்த்தியும் தன் அருகே பரீட்சைக்காக கொண்டு வருவதற்கு அனுமதிக்கப்படாத எந்தவொரு பொருளையும் அல்லது உபகரணத்தையும் வைத்திருத்தல் முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது. பரீட்சை மேற்பார்வையாளர் மற்றும் அவரது பணிக் குழாம் கட்டளையிட்டால் சகல பரீட்சார்த்திகளும் தன் வசம் உள்ளவற்றை வெளிப்படுத்துவதற்கும் மற்றும் பரிசோதிப்பதற்கும் கட்டுப்படுவதுடன் இவ்வாறான தேவைப்பாட்டினை மீறுவது மோசடியான செயற்பாட்டை செய்வதற்கு முயற்சித்ததாகக் கருதப்படும்.
13. எவரேனும் ஒரு பரீட்சார்த்தி வேறு ஒரு பரீட்சார்த்தியின் விடைத்தாளிலிருந்து அல்லது புத்தகத்திலிருந்து அல்லது தாளிலிருந்து அல்லது குறிப்பெழுதிய தாள்களிலிருந்து அல்லது சமிக்ஞைகள் மூலம் அல்லது வேறு ஏதேனும் ஒன்றிலிருந்து பார்த்து எழுதுதல் அல்லது பார்த்து எழுத முயற்சித்தல் அல்லது மோசடியாக நடந்து கொள்ளல் என்பன குற்றமாகும். வேறு பரீட்சார்த்திக்கு உதவி செய்தல், வேறு பரீட்சார்த்தியிடமிருந்து அல்லது நபரிடமிருந்து அல்லது பரீட்சை பணிக் குழுவினரிடமிருந்து உதவி பெறுதல் குற்றம் என்பதுடன் விடையளித்து முடிந்த சகல தாள்களையும் எழுதிக் கொண்டிருக்கும் தாளுக்குக் கீழே வைத்து விடையளித்தல் வேண்டும். எழுதுகின்ற தாள்களை மேசையின் மேல் பரப்பி வைத்திருத்தல் கூடாது.
14. பரீட்சை ஆரம்பிக்கப்பட்டு வினாத்தாளுக்கு விடையளிக்கும் போது எக்காரணம் கொண்டும் குறுகிய நேரத்திற்குக் கூட பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்வதற்கு எந்தவொரு பரீட்சார்த்திக்கும் இடமளிக்கப்பட மாட்டாது. எனினும், ஒரு பரீட்சார்த்திக்கு மலசலகூடத்திற்கு செல்வதற்காக பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்ல வேண்டிய அவசியம் ஏற்பட்டால் பரீட்சை மேற்பார்வையாளரின் உதவி பணிக் குழுவின் உத்தியோகத்தர் ஒருவரின் கண்காணிப்பின் கீழ் பரீட்சார்த்திக்கு சிறிது நேரம் வெளியே செல்வதற்கு அனுமதிக்கப்படுவார். அவ்வாறு வெளியே செல்லும் முன்பும், மீண்டும் பரீட்சை மண்டபத்திற்குள் வரும் போதும் அவர் சோதனைக்கு உட்படுத்தப்படல் வேண்டும்.
15. பரீட்சை மண்டபத்தில் விடையளிக்கத் தொடங்குவதற்கு முன் அல்லது பின் உரிய பரீட்சார்த்திக்குப் பதிலாக போலிப் பரீட்சார்த்தி ஒருவர் தோற்றுதல் தண்டனைக்கு உள்ளாகக்கூடிய செயற்பாடாகும். ஆளடையாள அட்டையை மாற்றுதல் அல்லது போலி அடையாள அட்டையைச் சமர்ப்பித்தல் ஒரு மோசடிச் செயற்பாடாகக் கருதப்படும்.
16. பரீட்சார்த்தி ஒருவர் அல்லது பரீட்சார்த்தி அல்லாத ஒருவர் எந்தவொரு பரீட்சார்த்திக்கும் தவறான முறையில், மோசடி செய்யும் வகையில் உதவி செய்தல் ஒரு பாரிய குற்றமாக கருதப்படும்.
17. பரீட்சார்த்தி ஒருவர் கீழ்க் குறிப்பிடப்படும் அறிவுறுத்தல்களுக்கமைய செயற்படல் வேண்டும்:
   (i) சகல பரீட்சார்த்திகளும் தனது அனுமதிப்பத்திரத்தில் கையொப்பத்தினை உறுதி செய்து கொள்வதும், விண்ணப்பிக்கப்பட்ட பாடங்கள் மற்றும் அனுமதிப்பத்திரத்தில் குறிப்பிட்டுள்ள பாடங்களுக்கிடையில் பொருந்தாத தன்மை காணப்படின் பரீட்சைத் திணைக்களத்தில் விசாரித்து பரீட்சைக்கு முன் அதைத் திருத்திக் கொள்வதும் மேற்கொள்ளப்பட வேண்டும்;
   (ii) பரீட்சை ஆரம்பிப்பதற்கு அரை (1/2) மணித்தியாலத்திற்கு முன்னர் பரீட்சை மண்டபத்திற்கு சமுகமளித்தல் உசிதமானது என்பதுடன், பரீட்சை மண்டபம் நிச்சயமாகத் தெரியாதவிடத்து பரீட்சை ஆரம்பிக்கும் தினத்திற்கு முன்னரே அது குறித்து விசாரித்து பரீட்சை மண்டபத்தை சரியாக இனங்காணல் சிறந்தது;
   (iii) பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்தி ஒவ்வொரு பாடங்களுக்குத் தோற்றும் போதும் தனது ஆள் அடையாள அட்டையை வழங்கி தனது ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும்.
      (a) ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்திக் கொள்வதற்குத் தேவையான ஆவணங்களை பரீட்சை மண்டபத்தில் சமர்ப்பிக்காவிடின், பரீட்சார்த்தியாய் இருத்தல் இரத்துச் செய்யப்பட நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதுடன், ஏதேனும் காரணத்தால் அதற்குத் தேவையான ஆவணங்களை பரீட்சை மண்டபத்திற்கு கொண்டு வர மறந்திருப்பின் அதனைப் பற்றி பரீட்சை மேற்பார்வையாளருக்கு அறிவித்து பரீட்சை முடிவடைவதற்கு முன்னர் அவற்றைச் சமர்ப்பிப்பதற்குரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.
      (b) சகல பரீட்சார்த்திகளும் தனது ஆள் அடையாளம் தெளிவாக வெளிப்படுத்தும் வகையில், முழு முகத்தையும் நன்றாக அடையாளம் காணக்கூடிய வகையில் பரீட்சை நடைபெறும் கால எல்லையில் பரீட்சை மண்டபத்தில் இருக்க வேண்டும்.
   (iv) பரீட்சார்த்தி புளூடூத் (Bluetooth) போன்ற இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள்/கருவிகளை (Electronic Communication Devices) உபயோகிக்கவில்லை என்பதனை உறுதி செய்து கொள்வதற்காக பரீட்சை மண்டபத்தில் தனது இரு காதுகளையும் தெளிவாகத் தெரியும் வகையில் வைத்திருத்தல் வேண்டும்;
   (v) பரீட்சை மண்டபத்தில் உமக்கு வழங்கப்படுகின்ற தாள்களை விடுத்து வேறு எவ்வித கடதாசிகளையும் விடையளிப்பதற்கு உபயோகிக்கக் கூடாது. எஞ்சிய கடதாசிகளை மற்றும் வேறு பொருட்களை அசுத்தப்படுத்தாது மீண்டும் உபயோகிக்கக்கூடிய வகையில் உமது மேசையின் மேல் வைக்க வேண்டும்;
   (vi) பரீட்சார்த்திகள் தங்களது பேனா, பென்சில், அழிறப்பர், அடிமட்டம், கேத்திரகணித உபகரணங்கள், வர்ணப் பென்சில் பெட்டி, வர்ண சோக் பெட்டி போன்றவற்றைக் கொண்டு வருதல் வேண்டும்;
   (vii) நீங்கள் உபயோகிக்கும் விடையளிக்கும் புத்தகம் மற்றும் சகல தாள்களிலும் விடையெழுத தொடங்கும் போது உடனடியாக சுட்டெண்ணைத் தெளிவாகக் குறிப்பிட வேண்டும். விடைத்தாள்களின் இருபுறமும் தெளிவாக, சுத்தமாக விடையெழுத வேண்டும். வினாவொன்றின் ஒரு பகுதிக்கு விடையெழுதிய பின் அவ் வினாவின் மற்றைய பகுதியை ஆரம்பிப்பதற்கு முன் ஒரு வரியையாவது வெறுமையாக விடுதல் வேண்டும். ஒவ்வொரு வினாக்களுக்குமான விடையினைப் புதிய பக்கத்தில் ஆரம்பித்தல் வேண்டும்;
   (viii) விடையளிக்கும் தாளின் இடதுபுற விளிம்புக்கோடு காணப்படுவது வினாக்களின் இலக்கங்களை எழுதுவதற்காகும். வலதுபுற விளிம்புக்கோடு ஒதுக்கப்பட்டிருப்பது மதிப்பிடுபவரின் உபயோகத்திற்காகும். அதனால் அவற்றில் எதுவும் எழுதுதலாகாது. உம்மால் விடையளிக்கப்பட்ட வினாக்களின் இலக்கங்களைப் பிழையாக இடுவது குழப்பத்திற்குக் காரணமாக அமையும் என்பதனால் வினா இலக்கத்தைச் சரியாக எழுதுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்;
   (ix) கணித வினாக்களுக்கு விடையளிக்கும் போது கணக்குச் செய்முறைகள் பார்த்த மற்றும் பரும்படி வேலைகள் அந்தந்த ஒழுங்கில் கணக்கிற்கான விடையைக் கண்டு பிடித்ததன் ஒரு பகுதியாகக் காட்டப்பட வேண்டும். அவசியமான இடங்களில் வரையப்படும் வரிப்படங்கள் மற்றும் படங்கள் சரியானவையாகவும் குறிப்பிடத்தக்க அளவு பெரிதானதாகவும் இருத்தல் வேண்டும்;
   (x) கட்டாயமான வினா மற்றும் தெரிவு செய்யப்பட வேண்டிய ஏனைய வினாக்கள் தொடர்பாக வினாப்பத்திரத்தில் ஆரம்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைக் கவனமாக வாசித்தல் வேண்டும். வினாப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப விடையளிக்கப்படாத சந்தர்ப்பங்களில் புள்ளிகள் வழங்கப்பட மாட்டாது;
   (xi) ஒவ்வொரு வினாவிற்கும் விடையளித்து முடிந்த பின் விடையளித்த புத்தகத்திற்கு மேலதிகமாக எழுதிய தாள்களை பக்க இலக்கங்களின் ஒழுங்கில் இணைத்து இடதுபுற மேல்மூலையில் கழராத வகையில் கட்டுதல்/இணைத்தல் வேண்டும். விடைப்பத்திரத்தைக் கையளிக்கும் முன் சகல விடைத்தாள்களும் இணைக்கப்பட்டுள்ளனவா என்பதனை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். விடைப்பத்திரத்தைக் கையளித்த பின் பரீட்சை மண்டபத்திற்கு வெளியே கொண்டு செல்லப்பட்ட எந்தவொரு விடை எழுதிய தாளும் மதிப்பீட்டிற்கு உட்படுத்தப்பட மாட்டாது;
   (xii) உங்கள் விடைத்தாளை பரீட்சை மேற்பார்வையாளரிடம் அல்லது பணிக் குழுவின் உத்தியோகத்தர் ஒருவரிடம் கையளித்தல் வேண்டும். விடைப்பத்திரங்களை சேகரிக்கும் வரை உங்களது ஆசனத்தில் அமர்ந்திருத்தல் வேண்டும். அவ்வாறு செய்வதற்குத் தவறுவதானது, சிலவேளை உமது விடைப்பத்திரம் காணாமல் போவதற்கும் நீர் ஏதாவது பாடத்திற்கு சமுகமளிக்கவில்லை என்று கருதுவதற்கும் காரணமாக அமையும்;
   (xiii) ஏதாவது காரணத்துக்காக பரீட்சை மேற்பார்வையாளருடன் அல்லது பணிக் குழுவின் உத்தியோகத்தர் ஒருவருடன் கதைக்க வேண்டிய அவசியம் ஏற்படின், ஏனையவர்களுக்கு இடையூறு ஏற்படாத வகையில் மேசையில் இருமுறை தட்டுவதன் மூலம் சமிக்ஞை செய்தல் வேண்டும்.

பரீட்சைகள் ஆணையாளர் நாயகம்.

இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்தை,
பத்தரமுல்லை.

# பதவிகள் - வெற்றிடம்

## சுகாதார, போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சு

*மருத்துவ விடயங்களுக்கான நிறைவுகாண் தொழில்வல்லுநர் சேவையின் மற்றும் துணை மருத்துவ சேவையின் பதவிகளுக்கு சேவையிலிருந்து விலகிய முப்படை அலுவலர்களை ஆட்சேர்ப்பு செய்தல் - 2019*

*01. அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் 2019.05.31 ஆந் திகதிய* PSC/ EST/ 06-05/ 04/ 2015 *எனும் இலக்க கடிதத்தின் அனுமதிக்கு அமைய சுகாதார, போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சின் மருத்துவ விடயங்களுக்கான நிறைவுகாண் தொழில்வல்லுநர் சேவையின் மற்றும் துணை மருத்துவ சேவையின் பின்வரும் பதவிகளுக்காக வேலையற்ற முப்படை அலுவலர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.*

*02.* **கல்வி மற்றும் பதவிக்கு உரித்தான ஏனைய விஷேட தகைமைகள் :**

| தொடர் இல. | பதவி | க.பொ.த. (சா.தர) தகைமைகள் | க.பொ.த. (உ.தர) தகைமைகள் |
|---|---|---|---|
| 01 | மருத்துவ ஆய்வுகூட தொழில்நுட்பவியலாளர் | சிங்கள மொழி/தமிழ் மொழி, கணிதம், விஞ்ஞானம் உட்பட நான்கு பாடங்களில் திறமைச் சித்தியுடன் ஒரே அமர்வில் ஆறு (06) பாடங்களில் க.பொ.த. (சா.த.) பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் மற்றும் இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாமல் க.பொ.த. (சா.த.)பரீட்சையில் ஆங்கிலப் பாடத்தில் சித்தியடைந்திருத்தல். | க.பொ.த. (உ.த.) பரீட்சையில் **இரசாயனவியல்** பாடத்தில் திறமைச்சித்தியுடன், பௌதிகவியல், உயிரியல், விவசாயம், இணைந்த கணிதம் ஆகிய பாடங்களில் இரண்டில் (02) ஒரே அமர்வில் சித்தியடைந்திருத்தல். |
| 02 | மருந்தாளர் | சிங்கள மொழி/தமிழ் மொழி, கணிதம், விஞ்ஞானம் உட்பட நான்கு பாடங்களில் திறமைச் சித்தியுடன் ஒரே அமர்வில் ஆறு (06) பாடங்களில் க.பொ.த. (சா.த.) பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் மற்றும் இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாமல் க.பொ.த. (சா.த.) பரீட்சையில் ஆங்கில பாடத்தில் சித்தியடைந்திருத்தல். | க. பொ. த. (உ.த.) பரீட்சையில் **இரசாயன வியல்** பாடத்தில் திறமைச் சித்தியுடன், பௌதிகவியல், உயிரியல், விவசாய விஞ்ஞானம், இணைந்த கணிதம் ஆகிய பாடங்களில் இரண்டில் (02) ஒரே அமர்வில் சித்தி யடைந்திருத்தல். |
| 03 | பௌதிக சிகிச்சையாளர் | சிங்கள மொழி/தமிழ் மொழி, கணிதம், விஞ்ஞானம் உட்பட நான்கு பாடங்களில் திறமைச் சித்தியுடன் ஒரே அமர்வில் ஆறு (06) பாடங்களில் க.பொ.த. (சா.த.) பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் மற்றும் இரண்டு அமர்வுகளுக்கு மேற் படாமல் க.பொ.த. (சா.த.) பரீட்சையில் ஆங்கில பாடத்தில் சித்தியடைந்திருத்தல். | க. பொ. த. (உ.த.) பரீட்சையில் **பௌதிகவியல்** பாடத்தில் திறமைச் சித்தியுடன், இரசாயன வியல், உயிரியல், விவசாய விஞ்ஞானம், இணைந்த கணிதம் ஆகிய பாடங்களில் இரண்டில் (02) ஒரே அமர்வில் சித்தி யடைந்திருத்தல். |

| *தொடர் இல.* | *பதவி* | *க.பொ.த. (சா.தர) தகைமைகள்* | *க.பொ.த. (உ.தர) தகைமைகள்* |
|---|---|---|---|
| 04 | தொழில்சார் சிகிச்சையாளர் | சிங்கள மொழி/ தமிழ் மொழி, கணிதம், விஞ்ஞானம் உட்பட நான்கு பாடங்களில் திறமைச் சித்தியுடன் ஒரே அமர்வில் ஆறு (06) பாடங்களில் க.பொ.த. (சா.த.) பரீட்சையில் சித்தி யடைந்திருத்தல் மற்றும் இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாமல் க.பொ.த. (சா.த.) பரீட்சையில் ஆங்கில பாடத்தில் சித்தியடைந்திருத்தல். | க. பொ. த. (உ. தர) பரீட்சையில் **பௌதிகவியல்** பாடத்தில் திறமைச் சித்தியுடன், இரசாயனவியல், உயிரியல், விவசாய விஞ்ஞானம், இணைந்த கணிதம் ஆகிய பாடங்களில் இரண்டில் (02) ஒரே அமர்வில் சித்தியடைந்திருத்தல். |
| 05 | கதிரியலாளர் | சிங்கள மொழி/தமிழ் மொழி, கணிதம், விஞ்ஞானம் உட்பட நான்கு பாடங்களில் திறமைச் சித்தியுடன் ஒரே அமர்வில் ஆறு (06) பாடங்களில் க.பொ.த. (சா.த.) பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் மற்றும் இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாமல் க. பொ. த. (சா. த.) பரீட்சையில் ஆங்கிலப் பாடத்தில் சித்தி அடைந் திருத்தல். | க. பொ. த. (உ.தர) பரீட்சையில் **பௌதிக வியல்** பாடத்தில் திறமைச் சித்தியுடன், இரசாயனவியல், உயிரியல், விவசாய விஞ்ஞானம், இணைந்த கணிதம் ஆகிய பாடங்களில் இரண்டில் (02) ஒரே அமர்வில் சித்தியடைந்திருத்தல். |
| 06 | கண் தொழில்நுட்ப வியலாளர் | சிங்கள மொழி/தமிழ் மொழி, கணிதம், விஞ்ஞானம் மற்றும் மேலும் ஒரு பாடத்தில் குறைந்தபட்சம் திறமைச் சித்தியுடன் இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாமல் **ஆங்கில மொழி** உட்பட ஆறு (06) பாடங்களில் க.பொ.த. (சா. தர) பரீட்சையில் சித்தியடைந் திருத்தல். | க.பொ.த. (உ.த.) பரீட்சையில் **பௌதிகவியல்** பாடத்தில் திறமைச் சித்தியுடன், இரசாயன வியல், உயிரியல், விவசாய விஞ்ஞானம் ஆகிய பாடங்களில் இரண்டில் (02) ஒரே அமர்வில் சித்தியடைந்திருத்தல். |
| 07 | பல் தொழில்நுட்ப வியலாளர் | சிங்கள மொழி/தமிழ் மொழி, கணிதம், விஞ்ஞானம் மற்றும் மேலும் ஒரு பாடத்தில் குறைந்தபட்சம் திறமைச் சித்தியுடன் இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாமல் ஆங்கில மொழி உட்பட ஆறு (06) பாடங்களில் க.பொ.த. (சா.த.) பரீட்சையில் சித்தியடைந்திருத்தல். | க. பொ. த. (உ. தர) பரீட்சையில் **இரசாயனவியல்** பாடத்தில் திறமைச் சித்தியுடன், பௌதிகவியல், உயிரியல், விவசாய விஞ்ஞானம், இணைந்த கணிதம் ஆகிய பாடங்களில் இரண்டில் (02) ஒரே அமர்வில் சித்தியடைந்திருத்தல். |

| *தொடர் இல.* | *பதவி* | *க.பொ.த. (சா.தர) தகைமைகள்* | *க.பொ.த. (உ.தர) தகைமைகள்* |
|---|---|---|---|
| 08 | பாடசாலை பல் சிகிச்சையாளர் | சிங்கள மொழி/ தமிழ் மொழி, கணிதம், விஞ்ஞானம் மற்றும் மேலும் ஒரு பாடத்தில் குறைந்தது திறமைச் சித்தியுடன் இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாமல் ஆங்கிலம் உட்பட ஆறு (06) பாடங்களில் க.பொ.த. (சா.தர) பரீட்சையில் சித்தியடைந்திருத்தல். | க. பொ. த. (உ.த.) பரீட்சையில் **உயிரியல் விஞ்ஞானத்தில்** திறமைச் சித்தியுடன், இரசாயனவியல், பௌதிகவியல், விவசாய விஞ்ஞானம் ஆகிய பாடங்களில் இரண்டில் (02) ஒரே அமர்வில் சித்தியடைந்திருத்தல். |
| 09 | சுகாதார பூச்சியியல் அலுவலர் | சிங்கள மொழி/ தமிழ் மொழி, கணிதம், விஞ்ஞானம் மற்றும் மேலும் ஒரு பாடத்தில் குறைந்தது திறமைச் சித்தியுடன் இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாமல் ஆங்கில மொழி உட்பட ஆறு (06) பாடங்களில் க.பொ.த. (சா.தர) பரீட்சையில் சித்தியடைந்திருத்தல். | க.பொ.த. (உ.த.) பரீட்சையில் **உயிரியல்** விஞ்ஞானத்தில் திறமைச் சித்தியுடன், பௌதிகவியல், இரசாயனவியல், விவசாய விஞ்ஞானம் ஆகிய பாடங்களில் இரண்டில் (02) ஒரே அமர்வில் சித்தியடைந்திருத்தல். |
| 10 | செயற்கை அவயவ தொழில்நுட்பவியலாளர் | விஞ்ஞானம், கணிதம் ஆங்கிலம் மற்றும் சிங்களம்/ தமிழ் ஆகிய பாடங்களில் திறமைச் சித்தியுடன் இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாமல் ஆறு (06) பாடங்களில் க. பொ. த. (சா.த.) பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் | க.பொ.த.(உ.த.)பரீட்சையில் **பௌதிகவியல்/ உயிரியல்** பாடத்தில் திறமைச் சித்தியுடன், விவசாய விஞ்ஞானம், இணைந்த கணிதம், இரசாயனவியல் ஆகிய பாடங்களில் மூன்று பாடங்களில் (03) ஒரே அமர்வில் சித்தியடைந்திருத்தல். |
| 11 | பொது சுகாதாரப் பரிசோதகர் | சிங்கள மொழி/தமிழ் மொழி, கணிதம், விஞ்ஞானம் மற்றும் மேலும் ஒரு பாடத்தில் குறைந்தபட்சம் திறமைச் சித்தியுடன் இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாமல் ஆங்கில மொழி உட்பட ஆறு (06) பாடங்களில் க.பொ.த.(சா.த.) பரீட்சையில் சித்தியடைந்திருத்தல். | க.பொ.த. (உ.த.) பரீட்சையில் **உயிரியல் விஞ்ஞானம் அல்லது இணைந்த கணிதம்** ஆகியவற்றில் ஒன்றில் திறமைச் சித்தியுடன், பௌதிகவியல், இரசாயனவியல், விவசாய விஞ்ஞானம் ஆகிய பாடங்களில் இரண்டில் (02) ஒரே அமர்வில் சித்தியடைந்திருத்தல். |
| 12 | இதயத்துடிப்பு பதிவாளர் | சிங்கள மொழி/தமிழ் மொழி, கணிதம், விஞ்ஞானம் மற்றும் மேலும் ஒரு பாடத்தில் குறைந்தபட்சம் திறமைச் சித்தியுடன் இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாமல் ஆங்கில மொழி உட்பட ஆறு (06) பாடங்களில் க.பொ.த. (சா.த.) பரீட்சையில் சித்தியடைந்திருத்தல். | க.பொ.த. (உ.த.) பரீட்சையில் உயிரியல் பாடத்தில் திறமைச் சித்தியுடன் பௌதிகவியல், இரசாயனவியல் ஆகிய பாடங்களில் இரண்டு (02) பாடங்களில் ஒரே அமர்வில் சித்தியடைந்திருத்தல். |

| தொடர் இல. | பதவி | க.பொ.த. (சா.தர) தகைமைகள் | க.பொ.த. (உ.தர) தகைமைகள் |
|---|---|---|---|
| 13 | மூளை மின் இயக்க பதிவாளர் | சிங்கள மொழி/தமிழ் மொழி, கணிதம், விஞ்ஞானம் மற்றும் மேலும் ஒரு பாடத்தில் குறைந்தபட்சம் திறமைச் சித்தியுடன் இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாமல் **ஆங்கில மொழி** உட்பட ஆறு (06) பாடங்களில் க. பொ. த. (சா. தர) பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் | க. பொ. த. (உ.தர) பரீட்சையில் **உயிரியல் பாடத்தில்** திறமைச்சித்தியுடன் பௌதிக வியல், இரசாயனவியல் ஆகிய பாடங்களில் இரண்டில் (02) ஒரே அமர்வில் சித்தியடைந் திருத்தல். |

**குறிப்பு** : மேற்படி பதவிகளுக்கு விண்ணப்பிக்கும் வேலையற்ற முப்படையினருக்கு அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் செயற்திட்ட விதிகளின் VII ஆவது அத்தியாயத்தின் 95 ஆவது பிரிவின் விதிமுறைகளுக்கு அமைய கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் குறித்து கருத்திற்கொள்ளப்படும்.

3. **ஏனைய பொது தகைமைகள்** .-

(அ) 2019.11.18 ஆந் திகதிக்கு 18 வயதிற்கு குறையாத, 50 வயதிற்கு மேற்படாதவராக இருத்தல் வேண்டும்;
(ஆ) சிறந்த உடல் மற்றும் உள ஆரோக்கியம் கொண்டவராக இருத்தல் வேண்டும். அதனை உறுதிப்படுத்துவதற்கு மருத்துவச் சான்றிதழொன்று சமர்ப்பித்தல் வேண்டும்.

4. **விண்ணப்பிக்கும் முறை**.-

(அ) A4 அளவு கொண்ட கடதாசியை பயன்படுத்தி இத்துடன் இணைக்கப்பட்ட மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கமைய (1 தொடக்கம் 09 வரை முதலாம் பக்கத்திலும் 10 தொடக்கம் 15 வரை இரண்டாம் பக்கத்திலும்) வரும் வகையில் விண்ணப்பங்கள் தயாரித்தல் வேண்டும்;
(ஆ) சமாதான நீதவான் அல்லது சத்திய ஆணையாளர் அல்லது சட்டத்தரணி அல்லது பிரசித்த நொத்தாரிசு அல்லது முப்படையில் அதிகாரம் பெற்ற அலுவலர் அல்லது பொலிஸ் சேவையில் வர்த்தமானி அறிவிப்பு செய்யப்பட்ட பதவி வகிக்கும் அலுவலர் அல்லது 3,93,684 இற்கு மேற்பட்ட வருடாந்த ஒன்றிணைந்த சம்பளம் பெறும் அரசாங்க அல்லது மாகாண சேவையில் பதவி வகிக்கும் உத்தியோகத்தர் ஒருவரினால் விண்ணப்பதாரியின் கையொப்பம் உறுதிப்படுத்தப்படல் வேண்டும்;
(இ) முறையாக பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பம் 9 × 4 அளவு கொண்ட கடித உறையில் இட்டு, அந்த கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் “நிறைவுகாண் தொழில்வல்லுநர் சேவையின் மற்றும் துணை மருத்துவ சேவையின் பதவிகளுக்கு வேலையற்ற முப்படை அலுவலர்களை ஆட்சேர்ப்பு செய்தல் - 2019” எனக் குறிப்பிட்டு 2019.12.27 ஆந் திகதிக்கு முன்னர் பணிப்பாளர் (நிர்வாகம்-நிறுவனம்), சுகாதார, போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சு, சுவசிறிபாய, 385, வண. பத்தேகம விமலவங்ச தேரோ மாவத்தை, கொழும்பு 10 எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைக்க வேண்டும்.

5. விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றதாக விண்ணப்பதாரிகளுக்கு அறிவிக்கப்படமாட்டாது என்பதுடன், உரிய தினத்திற்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். இவ்வறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கு மற்றும் மாதிரிப்படிவத்திற்கு அமையாத விண்ணப்பங்கள் எவ்வித அறிவிப்புகளும் இன்றி நிராகரிக்கப்படும்.

6. நேர்முகப் பரீட்சையின் போது விண்ணப்பதாரிகளினால் பின்வரும் ஆவணங்களின் மூலப்பிரதி மற்றும் அதன் சான்றுறுதி செய்த பிரதியொன்றும் சமர்ப்பித்தல் வேண்டும்.

(1) பிறப்புச்சான்றிதழ் ;
(2) க. பொ. த. (சா. தர) மற்றும் க. பொ. த. (உ. தர) பரீட்சை பெறுபேறுகளின் மூலப்பிரதிகள்;
(3) பட்டச்சான்றிதழின் மூலப்பிரதி (இதன் சான்றுறுதி செய்த பிரதியொன்றை விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்பப்படல் வேண்டும்.);
(4) தேசிய அடையாள அட்டை அல்லது செல்லுபடியாகும் கடவுச்சீட்டு அல்லது செல்லுபடியாகும் வாகன சாரதி அனுமதிப்பத்திரம்;
(5) வதிவை உறுதிப்படுத்துவதற்கு பிரதேச செயலாளரின் துணை ஒப்பமிட்டு கிராம அலுவலரினால் வழங்கப்பட்ட வதிவை உறுதிப்படுத்தும் சான்றிதழ் (கிராம சேவை சான்றிதழ்)

(6) முப்படையில் இருந்து முறையாக விலகிய சான்றிதழ்;
(7) சுகாதார, போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சினால் பெற்றுக்கொண்ட பதவிக்கு உரித்தான டிப்ளோமா சான்றிதழ்.

7. **சேவையில் ஈடுபடுத்துவதற்கான நிபந்தனைகள்.-** பதவிகளுக்கு நியமிக்கப்படுகின்ற எண்ணிக்கை தீர்மானிக்கப் படுவது அச்சந்தர்ப்பத்தில் உள்ள பதவி வெற்றிட அளவினைப் பொறுத்ததாகும். அதன் பிரகாரம் உரிய பதவியில் நிரந்தர நியமனம் வழங்குவதற்கு சுகாதார, போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சு தீர்மானித்தால் வெற்றிடங்களின் அடிப்படையில் குறித்த பதவியில் III ஆம் தரத்திற்கு நியமிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். நிறைவுகாண் சேவையின் மற்றும் துணை மருத்துவ சேவையின் பதவிகளுக்கு அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை 03/ 2016 இன்படி, கீழுள்ளவாறு சம்பள நிலை உரித்தாகுவதுடன், கொடுப்பனவு அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை 03/2016 இன் விதிமுறைகளுக்கு அமைய மேற்கொள்ளப்படும்.

| சம்பள அளவு | சம்பள படிமுறை |
|---|---|
| MT-4-2016 | 31,190 - 445 x10 - 660 x 11- 730 x 10 - 750 x 10 = 57,700 |
| MT-5-2016 | 31,635 - 445 x10 - 660 x 11- 730 x 10 - 750 x 10 = 58,145 |
| MT-6-2016 | 32,080 - 445 x10 - 660 x 11- 730 x 10 - 750 x 10 = 58,590 |

8. விண்ணப்பத்தை நிரப்பும் போது கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் மற்றும் விபரங்களை மிகவும் கவனமாகவும் பிழையின்றியும் உள்ளடக்கவும். பயிற்சிக்காக இணைத்துக் கொள்ளும் போது நியமனம் பெற்ற பின்பும் மேற்படி சான்றிதழ்கள் பொய்யானவை என நிரூபனமாகினால், சட்டரீதியாக நடவடிக்கை எடுப்பதற்காக குற்றப்புலனாய்வு திணைக்களத்திற்கு சமர்ப்பிப்பதற்கும், வழங்கப்பட்ட நியமனம் இரத்து செய்யப்பட்டு பயிற்சியிலிருந்து/ பதவியிலிருந்து நீக்கப்படுவதோடு அது தொடர்பாக ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பதுடன், மீண்டும் அரசாங்க சேவையில் இணைய முடியாதவாறு கருப்புப் பட்டியலில் அவருடைய பெயர் உள்வாங்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும்.

9. தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரி நாட்டின் எப்பாகத்திலும் சேவையாற்றுவதற்கு கட்டுப்பட்டுள்ளனர்.

10. மேற்படி இணைத்துக் கொள்ளப்பட்ட சகலரும் அரசாங்க ஊழியர்களுக்கான சகல சட்ட திட்டங்களுக்கும், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக் கோவைக்கும், நிதி ஒழுங்கு விதிகளுக்கும், சுகாதார, போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சினால் தீர்மானிக்கப்படும் கொள்கைகளுக்கும் நிதிப்பிரமாணம் மற்றும் ஏனைய கட்டளைகளுக்கும், அரசினால் காலத்திற்குக் காலம் வழங்கப்படுகின்ற சட்டதிட்டங்கள். கட்டளைகள் என்பவற்றிற்கும் நீங்கள் கட்டுப்படல் வேண்டும்.

11. பதவிக்கு ஆட்சேர்த்தல் தொடர்பாக இந்த வர்த்தமானி அறிவித்தல் ஊடாக உள்ளடங்காத விடயங்களில் ஏதாவது சிக்கல்கள் தோன்றினால் அது தொடர்பாக சுகாதார, போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சின் செயலாளரின் தீர்மானமே இறுதித்தீர்மானம் ஆகும். சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் வெளியிடப்படும் இந்த வர்த்தமானி அறிவித்தலில் மொழிகளுக்கிடையே ஏதேனும் முரண்பாடுகள் எழும் பட்சத்தில் சிங்கள மொழி மூலமான அறிவித்தலே சரியானது என கொள்ளப்படும்.

வசந்தா பெரேரா,
செயலாளர்,
சுகாதார, போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சு.

சுகாதார, போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சு,
"சுவசிறிபாய",
385, வண. பத்தேகம விமலவங்ச தேரோ மாவத்தை,
கொழும்பு-10,
2019, நவெம்பர் 18.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**மருத்துவ விடயங்களுக்கான நிறைவுகாண் தொழில்வல்லுநர் சேவையின் மற்றும் துணை மருத்துவ சேவையின் பதவிகளுக்கு சேவையில் இருந்து விலகிய முப்படை அலுவலர்களை ஆட்சேர்ப்பு செய்தல் - 2019**

| பதவிக்கு உரித்தான குறியீட்டு இலக்கம் (வர்த்தமானி அறிவித்தலுக்கு அமைய) |
|---|
| |

விண்ணப்பத்தை நிரப்புவதற்கு முன் வர்த்தமானியின் அறிவித்தலை முழுமையாக வாசிக்கவும்.

* விண்ணப்பிக்கும் பதவி (சிங்களத்தில்/தமிழில்) :...................................................

* விண்ணப்பிக்கும் பதவி (ஆங்கிலத்தில்) :...................................................

01. (அ) முதல் எழுத்துக்களுடன் பெயர் :...................................................
(ஆங்கில கெப்பிட்டல் எழுத்துக்களில்) : உ+ம் : A. B. C. SILVA
(ஆ) முழுப்பெயர் (ஆங்கில கெப்பிட்டல் எழுத்துக்களில்) :...................................................
(இ) முழுப்பெயர் (சிங்களத்தில்/தமிழில்) :...................................................

02. தேசிய ஆள் அடையாள அட்டை இல. : | | | | | | | | | | | | |

(நிழற் பிரதியொன்றை இணைக்கவும்)

03. தபால் முகவரி :

| சிங்களத்தில்/தமிழில் | ஆங்கிலத்தில் |
|---|---|
| ............................................. | ........................................ |
| ............................................. | ........................................ |
| ............................................. | ........................................ |
| ............................................. | ........................................ |

04. (அ) நிரந்தர முகவரி :

| சிங்களத்தில்/தமிழில் | ஆங்கிலத்தில் |
|---|---|
| ............................................. | ........................................ |
| ............................................. | ........................................ |
| ............................................. | ........................................ |
| ............................................. | ........................................ |

(ஆ) தொலைபேசி இலக்கம் :
கையடக்க | | | | | | | | | | |  நிலையான : | | | | | | | | | | |

(இ) வதிவிட மாவட்டம் : சிங்களத்தில்/தமிழில் :........................................... ஆங்கிலத்தில் :....................................
(ஈ) நீங்கள் இந்த மாவட்டத்தில் நிரந்தர வதிவிடமுடையவரா? ஆம்/இல்லை :...........................................
(உ) ஆம் எனின் எவ்வளவு காலம் : ...........................................

05. பிறந்த திகதி : ஆண்டு :.............................. மாதம் : ........................... திகதி :.............................

2019.12.27 ஆம் திகதியன்று வயது : வருடங்கள் :.............................. மாதங்கள் : ............................... நாட்கள் :........................

06. பால் : ஆண் ☐ பெண் ☐

07. நீர் ஓர் இலங்கைப் பிரஜையா? ஆம் ☐ இல்லை ☐ (உரிய கூட்டில் ✓ அடையாளம் இடவும்)

08. விவாக நிலைமை : விவாகமானவர் ☐ விவாகமாகாதவர் ☐ (உரிய கூட்டில் ✓ அடையாளம் இடவும்)

09. ஆயுதப்படையில் இணைந்த திகதி :............................

10. முப்படையிலிருந்து சட்டரீதியாக விலகிய திகதி :....................................

11. கல்வித் தகைமைகள் :
க. பொ. த. (சா. தரம்) பரீட்சை
சுட்டெண் :.......................... வருடம் :................................

| தொடர் இல. | பாடம் | சித்தி | தொடர் இல. | பாடம் | சித்தி |
|---|---|---|---|---|---|
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |

12. கல்வித் தகைமைகள் :
க. பொ. த. (உ. தரம்) பரீட்சை
சுட்டெண் :.......................... வருடம் :................................

| தொடர் இல. | பாடம் | சித்தி | தொடர் இல. | பாடம் | சித்தி |
|---|---|---|---|---|---|
| 1 | | | 2. | | |
| 3 | | | 4. | | |

13. நீங்கள் ஏதாவது குற்றச்செயலுக்காக நீதிமன்றத்தில் தண்டனை பெற்றுள்ளீரா? ஆம் ☐ இல்லை ☐
(பொருத்தமான கூட்டில் " ✓"குறியிடுக.)
ஆம் எனில் காரணத்தைக் குறிப்பிடுக :..........................................................................................................................................
..........................................................................................................................................................................

14. விண்ணப்பதாரியின் உறுதி உரை :

(அ) வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களை நன்கு வாசித்தும் அதிலுள்ள நிபந்தனைகளை நன்கு அறிந்தும் என்னால் இவ் விண்ணப்பப்படிவம் நிரப்பப்பட்டதென்றும் எனது அறிவுக்கெட்டியவரையில் இவ் விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள விபரங்கள் அனைத்தும் உண்மையானவை எனவும் உறுதிப்படுத்துகின்றேன்.

(ஆ) இங்கு என்னால் கொடுக்கப்பட்ட விபரங்களில் ஏதாவது பிழையென அல்லது தவறு எனக் காணுமிடத்து நான் சேவையிலிருந்து விலக்கப்படுவேன் என்பதை நான் நன்கறிவேன்.

----------,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :------.

15. கையொப்பத்தை உறுதிப்படுத்தல் :

இந்த விண்ணப்பப்படிவத்தை சமர்ப்பிக்கும் விண்ணப்பதாரியான திரு./ திருமதி/ செல்வி .......................................... அவர்கள் எனக்கு தனிப்பட்ட ரீதியில் பரீச்சயமானவர் எனவும் அவரது கையொப்பம் எனது முன்னிலையில் ................... ஆந் திகதி இடப்பட்டது எனவும் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

-------------,
உறுதிப்படுத்துபவரின் கையொப்பம்.
(பதவி முத்திரையுடன்)

திகதி :------.
உறுதிப்படுத்துபவரின் முழுப்பெயர் :------.
பதவி :------. பதவி முத்திரை
முகவரி :------.

12-156

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

திருத்தம்

## இலங்கை அதிபர் சேவை உத்தியோகத்தர்களுக்கான வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சைக்கான விண்ணப்பப்படிவங்களை ஏற்றுக்கொள்ளும் திகதியினை நீடித்தல்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 2,146 ஆம் இலக்க 2019.10.18 ஆந் திகதிய வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட்ட இலங்கை அதிபர் சேவை வகுப்பு 3 மற்றும் 2 ஐச் சேர்ந்த உத்தியோகத்தர்களுக்கான முதலாவது மற்றும் இரண்டாவது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சைக்கான விண்ணப்பப்படிவங்களை ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதி 2019.12.23 ஆந் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

எம். என். ரணசிங்க,
செயலாளர்,
கல்வி அமைச்சு.

12-141

---

## இலங்கை கல்வி நிர்வாக சேவை உத்தியோகத்தர்களுக்கான இரண்டாவது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை - 2018 (2019)

இலங்கை கல்வி நிர்வாக சேவையின் உத்தியோகத்தர்களுக்கான இரண்டாவது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை 2020, பங்குனி மாதம் கொழும்பில் நடாத்தப்படுமென இத்தால் அறியத் தருகின்றேன்.

2. இப் பரீட்சைக்குரிய பாடவிதானம் மற்றும் ஏனைய ஒழுங்கு விதிமுறைகள் இலக்கம் 1928/28 கொண்ட 2015.08.21 ஆம் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் பிரசுரிக்கப்பட்டுள்ளது. வசதி கருதி அப்பாட விதானம் மற்றும் ஏனைய ஒழுங்கு விதிமுறைகள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

3. பரீட்சை தொடர்பான விபரம் :

| வினாப்பத்திரம் | காலம் | மொத்தப் புள்ளிகள் | சித்திக்கான புள்ளிகள் |
|---|---|---|---|
| i. கல்விக் கொள்கைகள் | 02 மணி | 100 | 40 |
| ii. விடயம் சார்ந்த ஆய்வு | 02 மணி | 100 | 40 |

4. பரீட்சை நடாத்தும் அதிகாரி : பரீட்சை ஆணையாளர் நாயகம்
5. பரீட்சைக்கான பாட விதானம்

| வினாப் பத்திரத்தின் பெயர் | பாட விதானம் |
|---|---|
| I. கல்விக் கொள்கைகள் | இவ் வினாப் பத்திரம் இரண்டு பகுதிகளை உள்ளடக்கி இருக்கும்.<br>a) **பொதுக் கல்விக் கொள்கைகள்** - அரசினால் வெளியிடப்படும் சமகாலக் கல்விப் பிரகடனங்கள் தொடர்பாக பரீட்சார்த்தியின் அறிவினைப் பரிசோதிப்பதற்காக வினாக்கள் தயாரிக்கப்பட்டு இருக்கும். கொள்கைகளில் பிரகடனப்படுத்தப்பட்ட மாற்றங்களினால் தமது கடமைகள் சேவைகளில் ஏற்படுத்தப்பட்ட சிக்கல்கள் தொடர்பாக பரீட்சார்த்தியின் அறிவு பரிசோதிக்கப்படுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.<br>b) **பாடசாலைப் பாடத்திட்டம்** - பாடசாலை முறைமைக்குள் பல்வேறுபட்ட நிலைகளில் பாடத்திட்டத் துறை தொடர்பாக மற்றும் பாடத்திட்ட அடிப்படை நோக்கம் தொடர்பாக பரீட்சார்த்தியின் பொதுவான புரிந்துகொள்ளும் ஆற்றல் பரீட்சிக்கப்படுவதற்கு எதிர்பார்க்கப்படுகிறது. பாடசாலையில் மனித மற்றும் பௌதீக வளங்கள் போன்றவை பற்றி பரீட்சார்த்திக்கு புரிந்துகொள்ளும் ஆற்றல் இருக்க வேண்டியதுடன் அத்தகைய முன்னோக்கு கோணத்துடனான பாடத்திட்டம் தொடர்பாக விமர்சன ரீதியான கருத்துக்கள் முன்வைக்ககப்படுவதற்கு இயலுமாக இருத்தல் வேண்டும். |

| வினாப் பத்திரத்தின் பெயர் | பாட விதானம் |
|---|---|
| II. விடயம் சார்ந்த ஆய்வு | பரீட்சார்த்தியின் ஆக்கத்திறன் / படைப்பாற்றல் மற்றும் தர்க்க ரீதியாக சிந்திக்கும் ஆற்றல் மற்றும் பிரச்சினைகளைத் தீர்க்கும் ஆற்றல் பரிசோதிக்கப்படுவதற்காக தயாரிக்கப்பட்ட வினாப் பத்திரமாகும். |

6. உத்தியோகத்தரொருவருக்கு II ஆவது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சைக்கு உரிய அனைத்து விடயங்களுக்குமாக ஒரே தடவையில் அல்லது வெவ்வேறு சந்தர்ப்பங்களில் தோற்ற முடியும்.

7. **பரீட்சையின் மொழி மூலம்**.-

I. இப்பரீட்சை சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழி மூலம் நடைபெறும்.
II. பரீட்சார்த்தி விரும்பிய ஒரு மொழி மூலத்தில் மாத்திரம் பரீட்சைக்குத் தோற்றல் வேண்டும்.
III. பரீட்சார்த்தி அரச சேவையில் இணைவதற்காக தோற்றிய போட்டிப் பரீட்சையின் மொழி மூலம் அல்லது போட்டிப் பரீட்சை இன்றி அரச சேவையில் இணைந்து கொண்டவர்கள் தொடர்பில் அரச சேவையில் பிரவேசிப்பதற்கு தகைமைபெற்ற மொழி மூலம் விடையளிக்க முடியும்.

8. பரீட்சார்த்தி தமக்கு உரித்து அல்லாத மொழி மூலத்தில் பரீட்சைக்குத் தோற்றியதாகத் தெரியவரும் பட்சத்தில் அவரின் பரீட்சார்த்தி அந்தஸ்து இரத்துச் செய்யப்படும். பரீட்சைக்குத் தோற்றுவதற்கு விண்ணப்பிக்கும் மொழியைப் பின்னர் மாற்றியமைக்க இடமளிக்கப்படமாட்டாது.

9. விண்ணப்பப்படிவத்தை கீழ் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரிப் படிவத்திற்கமைய ஏ4 (A4) அளவுடைய கடதாசியில் இரு புறமும் பாவித்து சமர்ப்பிக்கப்படல் வேண்டும். (விண்ணப்பப் படிவத்தின் இலக்கம் 01 தொடக்கம் 06 வரைக்கும் முதலாம் பக்கத்திலும் மிகுதி இரண்டாம் பக்கத்திலும் அமையுமாறு சமர்ப்பிக்க வேண்டும்). சிங்கள மொழி மூல விண்ணப்பப்படிவத்தில் பரீட்சையின் பெயர் சிங்கள மொழிக்கு மேலதிகமாக ஆங்கில மொழி மூலமும், தமிழ் மொழி மூல விண்ணப்பப்படிவத்தில் பரீட்சையின் பெயர் தமிழ் மொழிக்கு மேலதிகமாக ஆங்கில மொழியிலும் குறிப்பிடப்படுதல் வேண்டும். உரிய தகவல்களை தமது கையெழுத்தினால் தெளிவாகப் பூரணப்படுத்த வேண்டும். மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு ஒவ்வாத விண்ணப்பங்கள் மற்றும் முறையாகப் பூர்த்திசெய்யப்படாத தகவல்களை உள்ளடக்கிய விண்ணப்பப்படிவங்கள் முன்னறிவித்தலின்றி நிராகரிக்கப்படும். விண்ணப்பப்படிவத்தின் நிழற்படப் பிரதியை தம்வசம் வைத்திருப்பது பயன்மிக்கதாகும். பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவம் பரீட்சை அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமைவானதா என்பது குறித்து விண்ணப்பதாரியால் விளக்கம் பெறவேண்டியதுடன் அவ்வாறு இல்லாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டதாக கருதப்படும்.

10. **பரீட்சைப் பெறுபேறுகள்**.-

i. பரீட்சையை நடாத்துதல் மற்றும் பெறுபேறுகளை வெளியிடல் தொடர்பில் பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் தீர்மானமே இறுதித் தீர்மானம் ஆகும்.
ii. பரீட்சைக்குத் தோற்றும் அனைத்து விண்ணப்பதாரிகளின் பெறுபேறுகள் உட்பட பெறுபேறுகளின் பட்டியல் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் கல்வி அமைச்சின் செயலாளருக்கு வழங்கப்படும்.

11. விண்ணப்பப்படிவம் 2020, தை மாதம் 03 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் "பரீட்சை ஆணையாளர் நாயகம், ஒழுங்கமைப்பு மற்றும் வெளிநாட்டுப் பரீட்சைக் கிளை, இலங்கைப் பரீட்சைத் திணைக்களம், த.பெ.இல. 1503, கொழும்பு" என்னும் முகவரிக்கு கிடைக்கும் வகையில் திணைக்களத் தலைவரூடாக பதிவுத் தபாலில் அனுப்பிவைக்க வேண்டும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் பரீட்சையின் பெயர் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும். உரிய தினத்திற்குப் பின்னர் கிடைக்கப் பெறும் விண்ணப்பப் படிவங்கள் நிராகரிக்கப்படும்.

12. வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகுதிகளை உடையவர்கள் மாத்திரம் விண்ணப்பம் கோரியுள்ளனர் என்ற முன் முடிவுக்கு அமைவாக அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள விண்ணப்பப்படிவத்தைப் பொறுப்பேற்கும் இறுதித் தினத்தன்று அல்லது அதற்கு முன்னர் பரீட்சைக் கட்டணம் உரியதாயின் அதற்குரிய பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தி பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டுடன் பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலம் விண்ணப்பதாரியின் கையொப்பத்தை திணைக்களப் பொறுப்பாளரின் உறுதியுடன் சரியாகப் பூர்த்திசெய்து அனுப்பியுள்ள விண்ணப்பதாரர்களுக்கு பரீட்சை

ஆணையாளர் நாயகத்தினால் பரீட்சை அனுமதிப்பத்திரம் அனுப்பப்படும். விண்ணப்பதாரிக்கு அனுமதி அட்டை அனுப்பப்பட்டவுடன் அது தொடர்பாகக் குறிப்பிட்ட அறிவித்தலொன்று பத்திரிகைகளிலும் திணைக்களத்தின் இணையத்தளத்திலும் இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் பிரசுரிக்கப்படும். அறிவித்தல் பிரசுரமாகி இரண்டு அல்லது மூன்று நாட்கள் கடந்த பின்னரும் விண்ணப்பதாரிக்கு அனுமதி அட்டை கிடைக்காத பட்சத்தில் பத்திரிகை அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு குறுஞ்செய்தி மூலமாகவோ அல்லது அமைச்சின் இணையத்தளம் மூலமாகவோ அது தொடர்பாக இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்திற்கு அறிவிக்க வேண்டும். அவ்வாறு அறியத்தரும்போது தாங்கள் வைத்துக்கொண்ட விண்ணப்பப்படிவத்தின், பணம் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டின், விண்ணப்பப்படிவம் பதிவுத்தபாலில் அனுப்பிவைக்கப்பட்ட பற்றுச்சீட்டின் உறுதிப்படுத்தப்பட்ட நிழற்படப் பிரதிகளுடன் தங்களது கோரிக்கைக் கடிதத்தையும் அதனுடன் வைத்து இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்திற்கு அனுப்பி வைப்பது மிகவும் பயன்மிக்கதாகும் (தொலைநகல் இல. 011-2784232). கொழும்புக்கு வெளியே உள்ள பிரதேசமொன்றின் விண்ணப்பதாரியாயின் அனுமதி அட்டையை அனுப்புவதற்காக தொலைநகல் இலக்கத்தைக் குறிப்பிடுவது மிகவும் அவசியமாகும்.

13. மேலே (12) ஆம் வாசகத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைகளை நிவர்த்தி செய்யத் தவறும் பட்சத்தில் பரீட்சார்த்தியால் பின்னர் சமர்ப்பிக்கப்படும் முறைப்பாடுகள் தொடர்பில் கருத்திற் கொள்ளப்படமாட்டாது.

14.

I. சகல பரீட்சார்த்திகளும் பரீட்சை அனுமதிப்பத்திரத்தில் தமது கையொப்பத்தினை உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டியதுடன் பரீட்சை ஆரம்பமாகும் தினத்தில் பரீட்சை மண்டபப் பொறுப்பாளருக்கு தமது கையொப்பத்தினை உறுதிப்படுத்திய அனுமதிப்பத்திரத்தினை சமர்ப்பித்தல் வேண்டும்.

II. பரீட்சை மண்டபத்தில் தமது ஆளடையாளத்தை உறுதிப்படுத்துவதற்கான சான்றுகளைச் சமர்ப்பிப்பது பரீட்சார்த்தியின் பொறுப்பாக இருப்பதுடன் அதற்கான அடையாள அட்டை அல்லது செல்லுபடியாகும் கடவுச்சீட்டு அல்லது செல்லுபடியாகும் இலங்கைச் சாரதி அனுமதிப்பத்திரம் மாத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும்.

15. இப்பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்திகளிடமிருந்து கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ளதன் அடிப்படையில் பரீட்சைக் கட்டணத்தை அறவிடத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. உரிய பரீட்சைக் கட்டணம், பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் வருமானத் தலைப்பு 2003-02-13 இல் வைப்புச் செய்யக்கூடியவாறு நாடெங்கும் அமைந்துள்ள எந்தவொரு தபால்/உப தபால் அலுவலகத்திற்குச் செலுத்திப் பெற்றுக்கொள்ளும் பற்றுச்சீட்டினை விண்ணப்பப்படிவத்தின் உரிய இடத்தில் ஒரு விளிம்பில் மாத்திரம் இருக்கும் வகையில் ஒட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கவும். (பற்றுச்சீட்டின் நிழற்படப்பிரதியைத் தாங்கள் வைத்திருப்பது பயன்மிக்கதாகும்).

a) முதல் தடவைக்கு (முழுமையான பரீட்சை அல்லது ஒரு பகுதிக்கு கட்டணம் அறவிடப்பட மாட்டாது.)

b) அதற்குப் பின்னர் ஒவ்வொரு தடவைக்காகவும்-

| | |
|---|---|
| முழுமையான பரீட்சைக்காக | ரூ. 1,200.00 உம் |
| ஒரு பாடத்திற்கு | ரூ. 600.00 உம் ஆகும். |

16. I. பரீட்சார்த்திக்கு பரீட்சை அனுமதி அட்டை வழங்கப்படுவது அவர் பரீட்சைக்குத் தோற்ற சகல தகைமைகளையும் பூர்த்திசெய்துள்ளார் என்று ஏற்றுக் கொண்டல்ல என்பதனைக் கவனத்தில் கொள்ள வேண்டும்.

II. பரீட்சை நடைபெறுவது தொடர்பில் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் சட்ட ஒழுங்குகளுக்கு பரீட்சார்த்தி கட்டுப்படுதல் வேண்டும். அச்சட்டங்களை மீறும் பட்சத்தில் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் தண்டனைக்கு உட்படவேண்டி ஏற்படும்.

17. சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளில் பிரசுரிக்கப்படும் இவ்வறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள மொழி வாசகங்களுக்கிடையே ஏதேனும் ஒப்பீடற்ற நிலைமைகள் அல்லது வேறுபாடுகள் எழும் பட்சத்தில் சிங்கள மொழி மூல அறிவித்தலுக்கமைய செயற்பட வேண்டும்.

18. இவ்வறிவித்தலில் குறிப்பிடப்படாத ஏதேனும் விடயம் இருப்பின் அது தொடர்பில் தீர்மானம் எடுக்கும் உரிமை கல்வி அமைச்சின் செயலாளருக்கு உரியதாகும்.

எம்.என். ரணசிங்க,
செயலாளர்,
கல்வி அமைச்சு.

கல்வி அமைச்சு,
பத்தரமுல்ல,
இசுருபாய,
2019.11.20

மாதிரி விண்ணப்பப் படிவம்

(அலுவலக உபயோகத்திற்கு மாத்திரம்)

**இலங்கை கல்வி நிர்வாக சேவை உத்தியோகத்தர்களுக்கான இரண்டாவது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை - 2018 (2019)**

**SECOND EFFICIENCY BAR EXAMINATION FOR OFFICERS OF THE SRI LANKA EDUCATION ADMINISTRATIVE SERVICE – 2018 (2019)**

உத்தியோகத்தர் பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலம் :

சிங்களம் - 2
தமிழ் - 3
ஆங்கிலம் - 4 (உரிய இலக்கத்தை கூட்டினுள் எழுதுக.)

(பரீட்சையின் பெயரை கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் குறிப்பிடவும்.)

1. I. முழுப்பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :
உதாரணம் : HENAGE DON SHIRAL GAYANTHA GUNASEKARA
……………………………………………………………………………………………………
II. இறுதியில் வரும் பெயரை முதலிலும் ஏனைய பெயர்களின் முதலெழுத்துக்களைப் பின்னரும் குறிப்பிடவும் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) உதாரணம் : GUNASEKARA H.D.S.G. ………………………………………………… ………………………………………………
III. முழுப்பெயர் (சிங்களம்/தமிழ்) : ……………………………………………………………………… ……………..

2. முகவரி :
I. பரீட்சை அனுமதி அட்டை அனுப்பவேண்டிய முகவரி (ஆங்கில பெரிய எழுத்தில்) :
……………………………………………………………………………………………………
II. அலுவலக முகவரி (சிங்களம்/தமிழ்) :…………………………………………………………….
III. சொந்த முகவரி (சிங்களம்/தமிழ்) :…………………………………………………………….
IV. தொலைபேசி இலக்கம் :…………………………………………………………………….

3. தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் :

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | | |

4. பால் : ஆண்/பெண்
ஆண் - 0
பெண் - 1
(உரிய இலக்கத்தினைக் கூட்டினுள் குறிப்பிடவும்.)

5. கையடக்கத் தொலைபேசி இலக்கம்:

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

6. அறிவித்தலின் (3) ஆவது வாசகத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பாட இலக்கங்களுடன் பரீட்சைக்குத் தோற்றும் பாடங்கள் தொடர்பாக தெளிவாகக் குறிப்பிடவும்.

| பாடம் | பாட இலக்கம் |
|---|---|
| | |
| | |

7. பிறந்த திகதி : ஆண்டு | | | | | மாதம் | | | திகதி | | |

8. பதவிப் பெயர்: ...............................................

9. திணைக்களம்/வலயக்கல்வி அலுவலகம்/கோட்டக்கல்வி அலுவலகம்/பாடசாலை: ............ ................................ ..........................................................................

10. இப்பரீட்சைக்கு முன்னர் முழுமையாக அல்லது பகுதியாகத் தோற்றியிருப்பின் அவ்வாறு தோற்றிய ஆண்டு, பாடம் மற்றும் மொழி மூலத்தைக் குறிப்பிடவும் :

| ஆண்டு | பாடம் | மொழிமூலம் |
|---|---|---|
| ......... | ............... | ............... |
| ......... | ............... | ............... |

11. பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்டமை தொடர்பான விபரங்கள் :
   (i) பரீட்சைக் கட்டணம் செலுத்திய தபால் அலுவலகம் :.......................................
   (ii) பற்றுச்சீட்டு இலக்கம் மற்றும் திகதி :.......................................................
   (iii) செலுத்தப்பட்ட தொகை :.................................................................

பணம் செலுத்தியதற்கான பற்றுச்சீட்டினை கழறாதவாறு ஒட்டவும். (நிழற்படப் பிரதியை வைத்திருக்கவும், உரியதாயின் மாத்திரம்)

12. மேற்கூறப்பட்ட விபரங்கள் உண்மையானது என்றும் விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள மொழிமூலம் இப்பரீட்சைக்குத் தோற்ற உரிமை உண்டென்றும் பரீட்சை தொடர்பான சகல சட்ட ஒழுங்குகளுக்கும் இணங்குவதாகவும் தெரிவிக்கிறேன். மேலும் பரீட்சையை நடாத்துவது தொடர்பில் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் சட்ட ஒழுங்குகளுக்கும் மற்றும் பெறுபேறுகளை வெளியிடல் தொடர்பில் எடுக்கப்படும் தீர்மானங்களுக்கு கட்டுப்படுவதாகவும் தெரிவிக்கிறேன்.

திகதி : ................ .......................................
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

பரீட்சை ஆணையாளர் நாயகம்,

இவ்விபரங்கள் குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சார்த்தி பரீட்சைக்குத் தோற்ற தகைமை பெற்றுள்ளதாகவும், விண்ணப்பப்படிவத்தில் அவரால் குறிப்பிடப்பட்டுள்ள மொழிமூலம் இப்பரீட்சைக்குத் தோற்ற அவர் தகைமை பெற்றுள்ளதாகவும் இத்தால் சான்றுபடுத்துகிறேன்.

பணம் செலுத்தியமைக்கான பற்றுச்சீட்டு மேலே ஒட்டப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கின்றேன். (*)

திகதி: ................ ............................................
திணைக்களத் தலைவரின் கையொப்பம்,
பதவிப்பெயர் மற்றும் பதவி முத்திரை.

(*) கட்டணம் செலுத்த அவசியமற்றிருப்பின் நீக்கிவிடவும்.

12-155

**அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்குமுரிய புதிய விகிதங்கள்**
**2014 சனவரி 01 ஆந் திகதி தொடங்கி அமுலுக்கு வந்தது**
**“இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை”**
**(வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படுவது.)**

**இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.**

1. பிரசுரிக்கப்படும் சகல அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் விளம்பரதாரர்களே பொறுப்பாளராவார்.

2. தனிப்பட்ட விளம்பரதாரர்களின் அறிவித்தல்களும், விளம்பரங்களும் உரிய முழுப் பணத்துடன் **அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு 8** அவர்களுக்கு நேரில் அல்லது தபால் மூலம் சேர்க்கப்படுதல் வேண்டும்.

3. அலுவலக நேரம் மு. ப. 8.30 மணி முதல் பி. ப. 4.15 மணி வரையாகும்.

4. பணம் கொடுக்கல் வாங்கல் மு. ப. 9.00 மணி முதல் பி. ப. 3.00 மணிவரை நடைபெறும்.

5. **சகல அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் முற்பணம் அனுப்பப்படுதல் வேண்டும்.** தபால் மூலம் அனுப்பப்படும் அறிவித்தல்கள், விளம்பரங்கள் ஆகியவைகளுடன் அரசாங்க அழுத்தகரின் பெயருக்கு எழுதப்பட்ட மணி ஓடர் அல்லது போஸ்ரல் ஓடர் அல்லது காசோலை அனுப்பப்படல் வேண்டும். தபால் அலுவலகம், “பொரல்லை” என்பதே காசுக் கட்டளைகளுக்கான செலுத்தப்படும் அலுவலகமாகும்.

6. **நகலைக் கடதாசியின் ஒரு பக்கத்தில் மாத்திரம் ரைப் அடித்தல்** பிழைகளையும் காலதாமதத்தையும் தவிர்க்க ஏதுவாகும். கையெழுத்துப் பிரதி எதுவும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

7. **கையொப்பங்களின் கீழ் அப்பெயர்கள் உறுப்பான எழுத்தில் திருப்பி எழுதப்படல் வேண்டும்.**

8. வியாபார விளம்பரங்களும் பெயர் மாற்றும் பற்றிய விளம்பரங்களும் பிரசுரத்துக்கு ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

9. நியாயஸ்தலத்தின் கட்டளையில் கொடுக்கப்பட வேண்டிய விளம்பரங்கள் ‘சுப்றீம் கோட்’ புறொக்டரால் கையொப்பமிடப்பட்டு அல்லது கையொப்பம் அத்தாட்சிப்படுத்தப்பட்டு அனுப்பாவிடின் பிரசுரிக்கப்பட மாட்டா.

10. அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் அங்கீகரிக்கப்பட்ட கிரய விகிதங்கள் 2013 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதியிலிருந்து பின்வருமாறு :-

| | ரூபா | ச. |
|---|---|---|
| ஒரு அங்குலம் அல்லது அதற்குக் குறைய | 137 | 00 |
| மேலதிகமான ஒவ்வொரு அங்குலமும் அல்லது அதன் பகுதிக்கும் | 137 | 00 |
| ஒரு பத்தி அல்லது வர்த்தமானியின் அரைப் பக்கம் | 1,300 | 00 |
| இரு பத்திகள் அல்லது வர்த்தமானியின் ஒரு பக்கம் | 2,600 | 00 |

ஒவ்வொரு அங்குலத்தின் பகுதிக்கும் முழு அங்குலத்தின் கிரயம் செலுத்தப்படல் வேண்டும்.

11. **வெள்ளிக்கிழமை தோறும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி** வெளியிடப்படும். அரசாங்க விடுமுறை இடையிடின் வெளியீட்டு நாள் மாற்றப்படும்.

12. **ஒவ்வொரு மாதமும் முதற்கிழமை வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும் கொடுக்கப்பட்டுள்ள அட்டவணையின் பிரகாரம் “அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு 8” அவர்கட்கு சகல அறிவித்தல்களும் விளம்பரங்களும் வந்துசேர வேண்டும்.**

13. **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி பெறப்படாமை, முகவரி மாற்றம் போன்ற எல்லாத் தொடர்புகளுக்கும், கொழும்பு 8, அரசாங்க அச்சுத் திணைக்களம், அரசாங்க அழுத்தகருக்கே எழுதுங்கள்.**

14. **2014 சனவரி 01 ஆந் திகதியிலிருந்து மீளவாய்ந்த புதிய சந்தா விபரம் :-**

| இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி (வருடத்திற்கு) | முழு வருடத்திற்கு மான கட்டணம் ரூபா ச. | தபால் செலவு ரூபா ச. |
|---|---|---|
| I ஆவது பகுதி : | | |
| I ஆவதுதொகுதி | 4,160.00 | 9,340.00 |
| II ஆவது தொகுதி (விளம்பரம், வெற்றிடங்கள், கேள்விகள், பரீட்சைகள் ஆகியன) | 580.00 | 950.00 |
| III ஆவது தொகுதி (ஆக்க உரிமை மற்றும் வியாபார உரிமை அடையாள விளம்பரங்கள் முதலியன) | 405.00 | 750.00 |
| I ஆவது பகுதி முழுவதும் (I, II, III தொகுதிகள் உட்பட) | 890.00 | 2,500.00 |
| II ஆவது பகுதி (சட்ட சம்பந்தமானது) | 860.00 | 450.00 |
| III ஆவது பகுதி (காணிகள்) | 260.00 | 275.00 |
| IV ஆவது பகுதி (மாகாண சபைகள், உள்ளூராட்சி) | 2,080.00 | 4,360.00 |
| V ஆவது பகுதி (பயண போக்குவரத்து சேவை முதலிய விண்ணப்பங்களுக்கான பட்டியல் மற்றும் புத்தகப் பட்டியல்) | 1,300.00 | 3,640.00 |
| VI ஆவது பகுதி (யூரிமார் பெயர்ப்பட்டியல், வைத்திய அலுவலர் பட்டியல், பிறப்பு, இறப்பு பதிவாளர் பட்டியல் முதலியன) | 780.00 | 1,250.00 |
| அதிவிசேட வர்த்தமானி | 5,145.00 | 5,520.00 |

**முழு ஆண்டின் இறுதி வரைக்கும் பன்னிரண்டு மாதங்களுக்குக் குறையாத காலவெல்லைக்கே சந்தா ஏற்றுக்கொள்ளப்படும்.**

**தனிப்பிரதிகள் (இருப்பிலிருந்தால்) அவற்றின் விகிதங்கள்**

| | விலை ரூபா ச. | தபால் செலவு ரூபா ச. |
|---|---|---|
| I ஆவது பகுதி : | | |
| I ஆவது தொகுதி | 40.00 | 60.00 |
| II ஆவது தொகுதி (விளம்பரம், வெற்றிடங்கள், கேள்விகள், பரீட்சைகள் ஆகியன) | 25.00 | 60.00 |
| III ஆவது தொகுதி | 15.00 | 60.00 |
| I ஆவது பகுதி (I, II, III தொகுதிகள் உட்பட) | 80.00 | 120.00 |
| II ஆவது பகுதி | 12.00 | 60.00 |
| III ஆவது பகுதி | 12.00 | 60.00 |
| IV ஆவது பகுதி (மாகாண சபைகள், உள்ளூராட்சி) | 23.00 | 60.00 |
| V ஆவது பகுதி | 123.00 | 60.00 |
| VI ஆவது பகுதி | 87.00 | 60.00 |

**எல்லா தனிப்பிரதிகளையும் கொழும்பு 5, பொல்ஹேன்கொடை, கிருளப்பனை மாவத்தை, இல. 163 எனும் முகவரியிலுள்ள அரச வெளியீட்டு பணியகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.**

## வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ் வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசதாரருக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களைப் பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சுத் திணைக்களத்துக்கு வந்துசேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.

**அரசாங்க அழுத்தகர் வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்களை ஏற்றுக்கொள்வார்.**

**முக்கிய கவனிப்பு.**– இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி விளம்பரங்களுக்கான கட்டணங்கள் யாவும் **அரசாங்க அழுத்தகரினால் ஏற்றுக்கொள்ளப்படும்.**

**அட்டவணை - 2019**

| மாதம் | | வெளியீட்டு நாள் | | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | | |
|---|---|---|---|---|---|---|---|
| **திசெம்பர்** | .. | வெள்ளி | 06.12.2019 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 22.11.2019 |
| | | வெள்ளி | 13.12.2019 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 29.11.2019 |
| | | வெள்ளி | 20.12.2019 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 06.12.2019 |
| | | வெள்ளி | 27.12.2019 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 13.12.2019 |

**அட்டவணை - 2020**

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| **சனவரி** | .. | வெள்ளி | 03.01.2020 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 20.12.2019 |
| | | வியாழன் | 09.01.2020 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 27.12.2019 |
| | | வெள்ளி | 17.01.2020 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 03.01.2020 |
| | | வெள்ளி | 24.01.2020 | .. | நண்பகல் 12 | வியாழன் | 09.01.2020 |
| | | வெள்ளி | 31.01.2020 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 17.01.2020 |
| **பெப்புருவரி** | .. | வெள்ளி | 07.02.2020 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 24.01.2020 |
| | | வெள்ளி | 14.02.2020 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 31.01.2020 |
| | | வியாழன் | 20.02.2020 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 07.02.2020 |
| | | வெள்ளி | 28.02.2020 | .. | நண்பகல் 12 | வியாழன் | 14.02.2020 |

**கங்கானி லியனகே,**
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2019 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.